**Central Organisation of**
**Tamil Nadu Electricity Employees**
(Regd. No. 158 / CPT, - Recognised by TNEB - Affiliated : CITU & EEFI)
E-mail : coteecitu@gmail.com

27, MOSQUE STREET,
C H E P A U K,
CHENNAI - 600 005.
Phone : 2 8 5 4 8 5 2 9
2 8 5 1 5 0 3 8
Fax : 2 8 5 1 6 5 7 4

President
S.S.SUBRAMANIAN

General Secretary
S. RAJENDRAN

Treasurer
M. VENKATESAN

**நாள்: 08.05.2017**

**பெறுநர்**
**தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர்,**
**தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் விநியோக கழகம்,**
**144, அண்ணாசாலை,**
**சென்னை 600 002**

**ஐயா,**

**பொருள் : பணியமைப்பு - நிர்வாகம் கடலூர் மின் விநியோக வட்டம், சிதம்பரம் கோட்டத்தில் பணிபுரியும் 15 வணிக ஆய்வாளர்களுக்கு எந்த வித வேண்டுகோளுமின்றி சிதம்பரம் கோட்ட செயற்பொறியாளர் அவர்களின் ஊர்மாற்ற உத்தரவால் பாதிக்கப்பட்ட ஊழியரின் மனைவி உயிருக்கு ஊசலாட்டம் - வாரிய தலைவரின் உடனடி நடவடிக்கை கோருதல் - சம்மந்தமாக....**

**பார்வை : குறிப்பாணை எண்.59/AA/DO/ADM-S/A4/FCI Tranfer/2017 Dt. 05.05.2017**

பார்வையில் கண்ட சிதம்பரம் கோட்டம், செயற்பொறியாளரின் குறிப்பாணையின் மூலமாக அக்கோட்டத்தில் பணியாற்றும் 15 வணிக ஆய்வாளர்களை எந்த வித காரணமும் இன்றி ஊர் மாற்றம் செய்ததை ரத்து செய்யக் கோருதல் சம்மந்தமாக எங்களது கருத்துக்களை தங்களின் கவனத்திற்கும் உடன் நடவடிக்கைக்கும் கொண்டு வர விரும்புகிறோம்.

05.05.2017 அன்று சிதம்பரம் கோட்ட வெயற்பொறியாளர் அக்கோட்டத்தில் பணியாற்றும் 15 வணிக ஆய்வாளரை எந்த வித காரணமும் இன்றி இட மாற்றல் உத்தரவை வழங்கி ஊர் மாற்றம் வழங்கப்பட்டவர்களில் 5 ஊழியர்களை நிர்ப்பந்தித்து பணி விடுவிப்பும் ஊர் மாற்ற உத்திரவை செய்துள்ளார். வாரிய விதிகளுக்கு உட்படாத ரத்து செய்ய வேண்டும் என தொழிற்சங்க நிர்வாகிகள் அனுகிய போது சில வணிக ஆய்வாளர்கள் இடம் மாற்றம் வேண்டி விண்ணப்பம் சமபித்து அவரை கவனித்த காரணத்தால் இடம் மாற்றம் கேட்ட 5 வணிக ஆய்வாளருக்கு ஊர் மாற்றம் வழங்க செயற்பொறியாளர்/சிதம்பரம் கோட்டம் அவர்கள் விதிகளை மீறி உத்தரவு பிறப்பித்ததோடு அதை ரத்து செய்ய வேண்டுமென கேட்ட தொழிற்சங்க நிர்வாகிகளை உங்களையும் இவ்வாறு ஊர்மாற்றம் செய்து விடுவேன் என்று மிரட்டியதோடு, கோட்ட செயற்பொறியாளர் போட்ட உத்தரவை நான் மாற்றம் செய்யமாட்டேன். மற்றவர்களும் மாற்றம் செய்ய அனுமதிக்க மாட்டேன் என்று சர்வாதிகாரியைப் போல தொழிற்சங்க நிர்வாகிகளிடம் பேசி தொழில் அமைதியை கெடுக்கும் நிலையை உருவாக்கியுள்ளார்கள்.

ஊர்மாற்றம் வழங்கப்பட்ட 15 வணிக ஆய்வாளர்களில் திரு.எஸ். சுபாஷ்சந்திரன், கிராமம், சிதம்பரம் பிரிவு அவர்களுக்கு அவர் பணிபுரியும் இடத்திலிருந்து 40 கிலோமீட்டருக்கு அப்பால் பாளையங்கோட்டை பிரிவிற்கு இடம் மாற்றல் செய்துள்ளார்கள். அவர் ஏற்கனவே சாலை விபத்தில் பாதிக்கப்பட்டு வெகு தூரம் செல்ல இயலாத நிலையில் உள்ளார். இவருக்கு பாளையங்கோட்டை பிரிவிற்கு இடம் மாற்றல் உத்தரவு வழங்கப்பட்டதனால் அவரது குடும்பத்தை அங்கு கொண்டு செல்வது சம்மந்தமாக அவர் தனது மனைவியுடன் கலந்து பேசிய போது அவருக்கு மன உளைச்சல் ஏற்பட்டு 05.05.2017 அன்று இரவு மண்எண்ணெய் ஊற்றி தீ வைத்து தற்கொலைக்கு முயற்சித்து பாண்டிச்சேரி ஜிப்மர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு உயிருக்கு போராடி வருகிறார். என்பதை தங்களின் உடனடி கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறோம்.

தமிழ் நாடு மின் வாரியத்தில் மூன்றாண்டுகளுக்கு மேல் பணிபுரியும் ஊழியர்களை இடம் மாற்றம் செய்ய வேண்டுமென எந்த உத்தரவும் வழங்கப்படவும் இல்லை. அவர் பணியாற்றும் மின் திட்டம் உட்பட எங்கேயும் மூன்றாண்டுகளாக பணியாற்றியவர்களுக்கு ஊர்மாற்றம் வழங்கப்படாத நிலையில் ஏதோ ஒரு தயலாபத்திற்காகவும், ஊழியர்களை பழி வாங்கும் நோக்கத் தோடும் பிறப்பிக்கப்பட்ட இந்த உத்தரவை தாங்கள் தலையிட்டு ரத்து செய்வதோடு எந்த வித முகாந்தரமும் இன்றி தனக்கு கீழ் பணியாற்றும் ஊழியர்களை தீடீரென இடம் மாற்றம் செய்ததனால் ஒரு ஊழியரின் மனைவியை தற்கொலை செய்து கொள்ளும் அளவிற்கு தான் தோன்றித் தனமாக செயலாற்றிய செயற்பொறியாளர்/சிதம்பரம் கோட்டம் அவர்கள் மீது கடுமையான நடவடிக்கையை எடுப்பதோடு திரு எஸ். சுபாஷ்சந்திரன் அவர்களின் மனைவிக்கு ஏற்பட்ட மருத்துவ செலவு முழுவதையும் வாரியம் ஏற்க வேண்டு மெனவும் கேட்டுக்கொள்ளுகிறோம்.

எனவே தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், தமிழ்நாடு மின்சார வாரியம் அவர்கள் இக்கடிதத்தின் மீது அவசர நடவடிக்கை எடுத்து சிதம்பரம் கோட்டம்/செயற்பொறியாளர் தன்னிச்சையாக வழங்கிய இடம் மாற்றத்தை ரத்து செய்வதோடு செயற்பொறியாளரின் அத்து மீறிய நடவடிக்கையால் பாதிக்கப்பட்டுள்ள திரு எஸ். சுபாஷ்சந்திரன் அவர்களின் மின் வாரிய அவர்கள் மனைவிக்கு ஏற்படும் மருத்துவ செலவை, ஈடுகட்டி அப்பணத்தை சிதம்பரம் கோட்ட செயற்பொறியாளர் ஊதியத்தில் இருந்து பிடித்தம் செய்து நியாயம் வழங்கிட வேணுமாய் கேட்டுக்கொள்ளுகிறோம்.

தோழமையுள்ள

(எஸ்.எஸ். சுப்பிரமணியன்)
தலைவர்

நகல் : 1. இயக்குநர்/விநியோகம்

2. தலைமைப்பொறியாளர்/விழுப்புரம் மண்டலம்/விழுப்புரம்

3. மேற்பார்வை பொறியாள்ர்/கடலூர் மின் விநியோகம் வட்டம்/கடலூர்